


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in · murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 21 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 14 – திங்கள்கிழமை 31 ஆகஸ்ட் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 21 : Thiruvalluvar Year - 2057 - Aavani 14 - Monday 31 August 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## சி.பி.சி.எல். விரிவாக்கத்திற்கு இழப்பீடு கோரிப் போராடிய

# நாகை விவசாயிகள் மீது தடியடி!

## த.வெ.க. அரசு அராஜகம்! பெண்கள் படுகாயம்!

நாகை, ஆக. 31 –

நாகப்பட்டினம் அருகே சி.பி.சி.எல். விரிவாக்க பணிகளுக்காக நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை கோரி போராடிய விவசாயிகள் மீது போலீசார் தாக்குதல் நடத்தினர்.

அமைச்சரை முற்றுகையிட காத்திருந்ததால் அவர்கள் குண்டுக்கட்டாக கைது செய்யப்பட்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் திரு மருகல் ஒன்றியம் பனங்குடி ஊராட்சியில் ஒன்றிய அரசுக்கு சொந்தமான சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் (சி.பி.சி.எல்.) நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தில் விரிவாக்க பணிகளுக்காக ரூ.31 ஆயிரத்து 500 கோடி மதிப்பில் 620 ஏக்கர் விவசாய நிலம் பனங்குடி, கோபுராஜபுரம், முட்டம், நரிமணம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கையகப்படுத்தப்பட்டது.

இதில், இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் விடுபட்ட 394 நபர்களை பட்டியலில் சேர்க்க கோரி அப்பகுதியைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட பொது மக்கள் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து மனு கொடுக்க நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்தனர். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த ஏ.டி.எஸ்.பி. வேணுகோபால்,



டி.எஸ்.பி. குணசேகரன் ஆகியோர் தலைமையிலான போலீசார், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுவதால் உள்ளே செல்ல அனுமதி இல்லை என கூறி தடுத்து நிறுத்தினர்.

இதனால் கோபமடைந்த பொது மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பிரதான வாயில் முன்பு அமர்ந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனே போலீசார் வேளாங்கண்ணி பேராலய திருவிழா நடப்பதால் போலீசார் பாதுகாப்பு பணிக்கு செல்ல வேண்டும். எனவே போராட்டத்தை கை விட்டு கலைந்து செல்லாவிட்டால் கைது செய்யப்படுவீர்கள் என மிரட்டினர்.

திருவிழாவிற்கு நடை பயணமாக வரும் நிதியமைச்சர் மரியவில்சன் நாகப்பட்டினம் வழியாக வேளாங்கண்ணி செல்லும் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய பதில் சொல்லி விட்டு செல்லும் வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருக்கிறோம், போலீசார் கைது செய்வதற்கு எல்லாம் நாங்கள் பயப்பட மாட்டோம் என விவசாயிகள் கூறினர்.

இதையடுத்து போராட்டம் நடத்திய ஆண்களை போலீசார் வலுக்கட்டாயமாக கைது செய்து வேனில் ஏற்றினர். அப்போது பெண்கள் போலீஸ் வேனை முற்றுகையிட்டு கைது செய்தவர்களை கீழே இறக்கி விட வேண்டும். போலீஸ் அராஜகம் ஒழிக என கோஷங்களை எழுப்பினர்.

இதனால் போலீஸ் வேன் 30 நிமிடம் முற்றுகையிடப்பட்டது. இதன் பின்னர் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் தாங்கள் வைத்திருந்த கயிறை எடுத்து வந்து போராட்டத்தில் ஈடுப்பட்ட பெண்களை தடுத்து நிறுத்தினர். அதையும் மீறி போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை போலீசார் கீழே தள்ளினர். அப்போது குழந்தைகளுடன் வந்த பெண்கள் கீழே விழுந்தனர்.

இதனால் போராட்டத்தில் ஈடுப்பட்ட பெண்கள் சிதறி ஓட தொடங்கினர். போலீசார் கீழே தள்ளியதில் குத்தாலம் பகுதியைச் சேர்ந்த வைஜெயந்தி என்பவருக்கு கையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். சிலருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

இதையடுத்து போராட்டத்தில் ஈடுப்பட்ட 70 ஆண்களை போலீஸ் வாகனத்தில் ஏற்றி சென்றனர்.

அப்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியில் காத்திருந்த பெண்கள் நாகப்பட்டினம் நாகூர் சாலையில் அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்படைந்தது. போலீசார் அவர்களை மிரட்டி மறியல் போராட்டத்தை கைவிட செய்தனர்.

தொடர்ந்து பெண்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளே நின்று கைது செய்தவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும். நிதியமைச்சரை சந்தித்து எங்கள் கோரிக்கையை தெரிவிக்கும் வரை செல்ல மாட்டோம் என கோரி கோஷங்களை எழுப்பினர்.

இதன் பின்னர் பெண் போலீசார் வரவழைக்கப்பட்டு, 260 பெண்களை கைது செய்தனர். அனைவரும் நாகூர் தனியார் திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். நிதியமைச்சர் செல்லும் பகுதியான நாகூர் முதல் நாகப்பட்டினம் வரை போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுப்படுத்தப்பட்டனர். 3 மணி நேரத்திற்கும் மேலாக போராட்டம் நடந்ததால் நாகப்பட்டினம் ஆட்சியர் அலுவலகம் பரபரப்பாக காணப்பட்டது.

## நேபாள துயரம்:

## உயிரிழப்பு 626 ஆக அதிகரிப்பு!

காத்மாண்டு, ஆக. 31 -

நேபாள வெள்ளப் பெருக்கில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 626 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இதுவரை 2,426 பேரை தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் அது கூறியுள்ளது.

நேபாளத்தில் கடந்த 26ம் தேதி லாங்டாங் லிருங் பனிச்சிகரத்தில் சுமார் 1.5 கி.மீ. அகலம் கொண்ட பனிமலை உடைந்து ஏரியில் விழுந்ததில், ஏரி உடைந்து சீனாவின் திபெத் பகுதி மற்றும் நேபாளத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டது. இதன் காரணமாக, நேபாளத்தின் போடேகோசி, திரிசூலி நதிகளில் பல மீட்டர் உயரத்துக்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கரையோர கட்டிடங்கள் பல வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

வெள்ள பாதிப்பு தொடர்பாக நேபாள உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மை ஆணையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் 626 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 2,426 பேரின் நிலை குறித்து இது வரை தகவல் இல்லை. அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. இவர்களில், 517 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். மருத்துவமனைகளில் 101 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேபாளத்தில் ஏற்பட்ட இந்த வெள்ளப்பெருக்கால் சீனாவின் திபெத் பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு 7 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 554 பேரை காணவில்லை என்றும் திபெத் அவசர கால மேலாண்மை துறை அறிவித்துள்ளது.

காணாமல் போனவர்களில் 260 பேர் வெளிநாட்டினர் என்று தெரிவித்துள்ள திபெத் அவசரகால மேலாண்மை துறை, அதே நேரத்தில் அவர்கள் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்த விவரங்களை இன்னும் வெளியிடவில்லை.

## இந்தியாவில் ஜூலை 2026-ல்

## குறைந்த விமானப் பயணிகள் போக்குவரத்து!

டெல்லி, ஆக. 31 -

இந்தியாவில் உள்நாட்டு விமான பயணிகளின் எண்ணிக்கையில் கணிசமாக சரிவு ஏற்பட்டுள்ளது. சமீபத்திய தகவலின்படி இந்தியாவில் ஜூலை மாதம் விமானங்களில் பயணித்தவர்கள் எண்ணிக்கை 4.5% சரிவடைந்து உள்ளது.

2025 ஜூலையில் 2.55 கோடி பேர் விமான பயணம் மேற்கொண்ட நிலையில் இவ்வாண்டு ஜூலையில் 2.43 கோடி பேர் மட்டுமே பயணம் செய்து உள்ளனர். சிவில் விமானப் போக்குவரத்து பொது இயக்குநரகம் (DGCA) வெளியிட்டுள்ள தரவுகளின்படி, கடந்த ஆண்டு (2025) ஜூலையில் 1.26 கோடியாக இருந்த பயணிகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டு ஜூலையில் 1.20 கோடியாக சரிந்துள்ளது.

இந்தியாவில் உள்நாட்டு விமான பயணிகள் எண்ணிக்கை கடந்த ஜூலையில் 4.74 சதவீதம் சரிவை பதிவு செய்துள்ளது. அதே போல வெளிநாட்டு பயணிகள் எண்ணிக்கை ஜூலை மாதத்தில் 4.59 சதவீதம் சரிந்து உள்ளது. நாட்டின் மற்ற நகரங்களில் பயணிகள் எண்ணிக்கை குறைந்த நிலையில், கடந்த ஜூலையில் டெல்லியில் மட்டும் விமான பயணிகள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் 63.3 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு விமானங்களில் பயணம் செய்துள்ளனர்.

அதே நேரம் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அதாவது 2025ஆன் ஆண்டு ஜூலையில் 66.3 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு விமானங்களில் சென்றுள்ளனர். தமிழ்நாட்டிலும் கூட கடந்த ஜூலையில் விமானங்களில் பயணித்தவர்கள் எண்ணிக்கை சரிவை சந்தித்து உள்ளது.

## முன்னாள் அமைச்சர் – த.வெ.க.

# சி.விஜயபாஸ்கர் மீது ரூ.4 கோடி மோசடி புகார்!

## ஆலங்குடி அ.தி.மு.க .வேட்பாளர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு!

சென்னை, ஆக. 31 -

சட்டப்பேரவை தேர்தலில் சீட் வாங்கித் தருவதாகக் கூறி பெற்ற 4 கோடி ரூபாயை திருப்பித் தராமல் ஏமாற்றிய முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் உள்ளிட்டோருக்கு எதிரான புகார் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடக் கோரி, ஆலங்குடி அ.தி.மு.க .வேட்பாளர் தனவிமல், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியைச் சேர்ந்த தனவிமல் தாக்கல் செய்துள்ள மனுவில், சட்டப் பேரவைத் தேர்தலில் ஆலங்குடி தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்ததாகக் கூறியுள்ளார்.

இதுசம்பந்தமாக அப்போது மாவட்டச் செயலாளராக இருந்த முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், தன்னை மொபைல் போனில் தொடர்பு கொண்டு, தேர்தல் செலவுகளை மேற்கொள்ளும் தகுதியை நிரூபிக்க ரூ.5 கோடி தரும்படி வலியுறுத்தினார்.

மேலும், வேட்பாளர் பட்டியல் அறிவித்ததும் பணத்தை திருப்பித் தந்து விடுவதாக உறுதியளித்ததாகவும் மனுவில் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 4 கோடியே 50 லட்சம் ரூபாயை திரட்டி, சி.விஜயபாஸ்கர் குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் சோத்துப்பாலை முருகேசன் என்பவரிடம் கொடுத்ததாகவும், வேட்பாளர் பட்டியலில் தனது பெயர் அறிவிக்கப்பட்ட பின், தேர்தல் செலவுகளுக்காக பணத்தை திருப்பிக் கேட்டபோது, 50 லட்சம் ரூபாய் மட்டுமே திருப்பி தந்ததாகவும், மீதமுள்ள தொகையை தராமல் இழுத்தடித்ததாகவும் மனுவில் குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போது சி.விஜயபாஸ்கர், ஆளும் த.வெ.கவில் இணைந்துள்ள நிலையில், பணத்தை திருப்பிக் கேட்ட போது மிரட்டல் விடுத்ததாகவும், இதுசம்பந்தமாக புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனது புகார் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்திருக்கிறார். இந்த மனு, விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உதகை அரசு மருத்துவமனையில் த.வெ.க.வினர் லஞ்சம்!

உதகை, ஆக. 31 –

நீலகிரியில், தொகுப்பு ஊதிய அடிப்படையில் தற்காலிக பணி பெற்றுத் தருவதாக பெண்ணிடம் த.வெ.க. நிர்வாகி பேரம் பேசும் ஆடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தொகுப்பு ஊதிய அடிப்படையில் தற்காலிகப் பணி பெற்றுத் தருவதற்காக த.வெ.க . நிர்வாகிகள் பல லட்சம் ரூபாய் லஞ்சம் பெறுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேலும், த.வெ.க.வினர் பரிந்துரை செய்பவர்கள் மட்டுமே வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகவும், தொகுப்பு ஊதியத்தில் வேலையில் சேர்த்திட பெண்ணிடம் த.வெ.க. நிர்வாகி பேரம் பேசிய ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இடஒதுக்கீடு:

## வரலாற்றை இருட்டடிப்பு செய்வதா?

## த.வெ.க. அரசுக்குக் கண்டனம்!

சென்னை, ஆக. 31 –

இடஒதுக்கீடு விவகாரத்தில் வரலாற்றை இருட்டடிப்பு செய்ய முயற்சிக்கும் த.வெ.க. அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் சிந்தனைச் செல்வன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிந்தனைச்செல்வன் வெளியிட்ட கண்டன அறிக்கையில், பிற்படுத்தப்பட்டோர் மானிய கோரிக்கை, கொள்கை குறிப்பேட்டில் இடம்பெற்ற இடஒதுக்கீடு வரலாற்று குறிப்பில் தந்தை பெரியார், அம்பேத்கர், நேரு ஆகியோரின் பெயர்கள் ஏன் நீக்கப்பட்டன என்ற த.வெ.க. அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

நீதிக்கட்சியின் பெயரும் தவிர்க்கப்பட்டு இருட்டடிப்பு செய்யப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

வரலாற்றை இருட்டடிப்பு செய்வதைவிட பெரிய வன்கொடுமை வேறெதும் இருக்க முடியாது என்றும், இதற்கு காரணமானவர்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் த.வெ.க. அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் சிந்தனைச்செல்வன் வலியுறுத்தியுள்ளார்.